# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF Prl. DISTRICT AND SESSIONS JUDGE
KANYAKUMARI AT NAGERCOIL

Calendar
Miscellaneous
Preliminary Register
Session Case S.C.No. 21/2024
Prosecution Witness -P.W. 10

Deposition of witness for Prosecution

| | | |
|---|---|---|
| Name | : | திரு. விஜூ |
| Father's Name | : | மணி |
| Village | : | காடேற்றி |
| Taluk | : | கல்குளம் |
| Caste | : | இந்து கேர முதலி |
| Calling | : | - |
| Religion | : | இந்து |
| Age | : | 36 |
| Date | : | 13.06.2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.06.2024.

(எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர்.)

13.06.2024

முதல் விசாரணை :-

நான் தற்போது அனந்தம்பாலம் பெருமாள் நகர் 1 ல் குடியிருக்கிறேன். நான் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் கேங்மேன் ஆக பணிபுரிகிறேன். கிருஷ்ணன்கோவில் பிரிவ அலுவலகத்தில் கேங்மேன ஆக பணிபுரிகிறேன். 28.08.2023 அன்று கிருஷ்ணன்கோவில் தெப்பகுளத்தில் மின் தடை எதுவும் ஏற்படவில்லை. இரவு 7.00 மணி முதல் மறுநாள் 29.08.2023 காலை 7.00 மணி வரையில் மின்தடை எதுவும் ஏற்படவில்லை. கிருஷ்ணன்கோவில் தெப்பகுளத்தில் ஒரு கொலை நடந்ததாக மறுநாள்

கேள்விபட்டேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :-</u>

நான் வசிக்கும் ஊர் குருந்தன்கோடு வடசேரி காவல் நிலையத்திலிருந்து சுமார் 40 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது என்றால் சரிதான். என்னுடைய பணி நேரம் காலை 8.00 மணி முதல் இரவு 7.00 மணி வரை. நான் இரவு 7.00 மணிக்கு வீட்டுக்கு சென்றுவிடுவேன் என்றால் சரிதான். இரவு 7.00 மணிக்கு பிறகு மின் விநியோகம் அந்த பகுதியில் உள்ளதா என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தெப்பகுளத்தின் அருகில் எத்தனை மின் விளக்கு கம்பம் உள்ளது என்பதோ அதன் எண்களோ எனக்கு தெரியாது என்றால் சரிதான். மின் விளக்கு கம்பத்தில் உள்ள மின் விளக்குகளை அணைப்பதும், போடுவதும் பஞ்சாயத்து அல்லது Municipality என்றால் சரிதான்.

<u>மறு விசாரணை (அரசு தரப்பில்) :-</u>

28.08.2023 இரவு 7.00 மணி முதல் மறுநாள் காலை 7.00 மணி வரை அந்த பகுதியில் மின் தடை எதுவும் வந்ததா என்றால் இல்லை.

<u>நீதிமன்ற கேள்வி :-</u>

எதை வைத்து 28.08.2023 இரவு 7.00 மணி முதல் மறுநாள் காலை 7.00 மணி வரை அந்த பகுதியில் மின் தடை இல்லை என் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அப்படி மின் தடை இருந்திருந்தால் எனக்கோ, உதவி பொறியாளருக்கோ போன் செய்திருப்பார்கள். போன் எதுவும் வரவில்லை. அதை வைத்து சொல்கிறேன்.

<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :-</u>

நான் 28.08.2023 ஆம் தேதி இரவு 7.00 மணிக்கு வீட்டுக்கு சென்ற பிறகு அலுவலக பொறுப்பு எனக்கு கிடையாது என்றால் சரிதான். அதனால் அந்த நேரத்தில் மின் தட்டுபாடு இருந்ததா இல்லையா என்பதை அறுதியிட்டு என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான். நான் வேலை பார்த்த பிரிவு அலுவலகத்திற்கோ,

உதவி பொறியாளருக்கோ மின் தடை இருந்தது குறித்து போன் வந்திருந்தால் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.